சந்தித்து இது சம்பந்தமாக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சத்தியாதவ் அவர்களுடன் ஒருமுறை தொலைபேசி மூலம் பேசிய பின் தான் தமிழக அரசின் அமைச்சர்கள் மத்திய ஜவுளித் துறை அமைச்சரை சந்தித்துப் பேசினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

19-4-90 மாலை தமிழக அரசு அமைச்சர்கள் இருவரும் அதிகாரிகளுடன், B.I.F.R அலுவலகம் சென்று அதனின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன், அவர்களிடத்தில் நிலுவையிலிருக்கும் நான்கு ஆலைகளைப்பற்றி விரிவாக கலந்துரையாடினர். B.I.F.R. தலைவரும், உறுப்பினர்களும் நல்லிணக்கம் காட்டி, அரசே ஏற்று நடத்த முன்வந்தால் ஸ்திரத் தன்மையைப் (Viability) எற்றி ஒப்புதல் அளிக்க B.I.F.R.-க்கு ஆட்சேபணை இருக்காது என்று சொல்லி, அதற்கான ஒரு வாய்தாவையும் விரைவிலேயே போடுவதாகச் சொல்லி அந்த வாய்தாவுக்கான தேதியாக 17-5-90 என்று நிர்ணயித்து, அன்றைக்கே அந்த நான்கு ஆலைகளின் ஸ்திரத் தன்மை பற்றி ஒப்புதல் (Viability clearance) கொடுக்க இயலும் என்ற பாணியில் பேசினார்கள். அவர்களோடு கலந்துரையாடியது உற்சாகமாகவும், விரைவில் ஒரு முடிவு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறும் புலப்பட்டது.

இந்நிலையில் B.I.F.R. அல்லது NODAL ஏஜென்சி மூலமாக "Viability clearance" கொடுத்த பின்போ, அல்லது அதற்கு முன்போ மத்திய அரசு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் ஒப்புதலுக்கு B.I.F.R. அல்லது NODAL ஏஜென்சி clearance வேண்டும் என்று வைத்துக்கொண்டாலும், அவைகள் இன்னும் சில வாரங்களில் கிடைத்துவிடும். அந்த "clearance" கிடைத்த ஒரு சில நாட்களில், மத்திய அரசின் ஒப்புதல் வாங்கிவிட முடியும். ஆகக்கூடி ஓரிரு மாதங்களில் நிச்சயமாக இந்த ஆலைகளைத் திறப்பதற்கான அத்தனை ஆணைகளும் வழிமுறைகளும் பூர்த்தியாகிவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

சத்தியமே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. அறிவிப்புகள்.

(அ) 1990-91-ஆம் ஆண்டிற்கான பேரவைக் குழுக்கள்.

(i) பேரவை விதிகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 256-வது விதியின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்குப் பின்வரும் உறுப்பினர்களைப் பேரவை விதிகள் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

1. மாண்புமிகு முதலமைச்சர்

2. மாண்புமிகு பேரவை முன்னவர்

3. மாண்புமிகு சட்ட அமைச்சர்
4. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. திரு. எஸ். ஆர். இராதா, எதிர்க் கட்சித் தலைவர்
7. திரு. சம்சுதீன் என்கிற கதிரவன், அரசுத் தலைமைக் கொறடா
8. திரு. என். கணபதி
9. திரு. பெ. சீனிவாசன்
10. திரு. ராம. நாராயணன்
11. திரு. எஸ். திருநாவுக்கரசு
12. திரு. ஜி. கருப்பையா மூப்பனார்
13. திரு. குமரி அனந்தன்
14. திரு. கே. ரமணி
15. திரு. எம். அப்துல் லத்தீப்
16. திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்

பேரவை விதி 256-ன் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

(ii) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 239(1)-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1990—91 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1. மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி, பேரவைத் துணைத் தலைவர்
2. திரு. அ. கணேசமூர்த்தி
3. திரு. அ. இராசேந்திரன்
4. திரு. கா. அண்ணாதுரை
5. திரு. தா. உதயசூரியன்
6. திரு. டி. ஆர். கஜபதி
7. திரு. வீ. செ. கோவிந்தசாமி
8. பேராசிரியர் க. பொன்னுசாமி

9. திரு. எஸ். டி. உகம்சந்த்
10. திரு. எஸ். டேனியல்ராஜ்
11. திரு. ந. ராமச்சந்திர ரெட்டி
12. திரு. ந. நஞ்சப்பன்

பேரவையின் 240-வது விதியின் கீழ் மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி, பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

(iii) அவைக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 253 (1)-இன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, 1990–91 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1. திரு. செ. இராமச்சந்திரன்
2. திரு. கே. இராமச்சந்திரன்
3. திரு. எஸ். ஆர். முனிரத்தினம்
4. திரு. எம். முத்தையா
5. திரு. எம். முத்தையன்
6. திரு. ஜி. பொன்னுபிள்ளை
7. திரு. ஏ. கோதண்டம்
8. திரு. ஏ. சுப்பு
9. திரு. எஸ். குணசேகரன்
10. திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி
11. திரு. கே. ஆர். இராஜேந்திரன்
12. திரு. க. பழனிசுவாமி
13. திரு. எம். மோசஸ்
14. திரு. ஆ. மு. முனிரத்தினம்
15. திரு. எம். அண்ணாமலை
16. திரு. ஜி. பழனிச்சாமி
17. திரு. ஜெ. அசேன்
18. திரு. ந. நஞ்சப்பன்

பேரவை விதி 253 (1)-ன் கீழ், திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.